**பதவி ஸ்ரீ புர பிரதேச சபை**
**திருகோணமலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 19 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 25 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 நவம்பர் 22 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து பதவி ஸ்ரீ புர பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வர்த்தக அனுமதிப்பத்திரப் பதிவேட்டின் பிரகாரம் 2015 ஆண்டின் போது கிடைத்திருந்த வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 153,975 தொகை எனினும், அதனை ரூபா 114,700 தொகை என வருமானச் செலவுக் கணக்கில் உட்படுத்தியிருந்தமையால் வருமானம் ரூபா 39,275 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) வர்த்தக அனுமதிப்பத்திரப் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணத்தின் பெறுமதி ரூபா 314,800 தொகை எனினும், அவை ஐந்தொகையால் ரூபா 46,700 தொகை என காட்டப்பட்டிருந்தமையினால் சொத்துக்கள் ரூபா 268,100 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான கடை வாடகை வருமானம் ரூபா 419,627 தொகை எனினும், அவை வருமானச் செலவுக் கணக்கில் ரூபா 263,889 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 155,738 தொகையினால் வருமானம் குறைாவகக் காட்ப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,630,456 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,029,656 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,399,200 இற்கான வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| குத்தகை | 988 | 904 | 101 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 161 | 161 | 49 |
| ஏனைய வருமானங்கள் | 7,496 | 9,430 | 824 |

### 2.2.2 ஏனைய வருமானங்கள்

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நான்கு தொலைத் தொடர்பு கோபுரங்கள் காணப்பட்டதுடன் அந்த கோபுரங்களை பேணுவதற்கான சபையினால் துணை விதிகள் ஆக்கப்பட்டு உரிய நிறுவனங்களில் இருந்து கட்டணம் ஒன்று அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் சபை ஈட்டக்கூடிய வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

## 3. நிதி மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ திறமையின்மை

இது தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) 2005 இன் 03 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் III ஆம் பிரிவு இன் பிரகாரம் ( 2007 இன் 13 மற்றும் 2009 இன் 18 ஆம் இலக்க திருத்தச் சட்டங்களின் கீழ்) சபையின் தலைமை அலுவலக கட்டிடம் சிங்ஹபுர சிறுவர் பிணி ஆய்வு நிலையம் பழைய மதவாச்சி பிணி ஆய்வு நிலையம் மற்றும் ஜயந்தி வெவ வாராந்த சந்தை என்பன நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காரருக்கு செலுத்தியிருந்த ரூபா 53,484,226 தொகைக்குரிய கைத்தொழில் சான்றிதழ் நிதிய வரி (CIGFL) ஆகிய ரூபா 133,711 தொகையினை தடுத்து வைத்து உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) காணிகளின் சட்டரீதியான உரிமையை பெற்றுக்கொள்ளாமல் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிர்மாண வேலைகளின் மற்றும் காணிகளின் பெறுமதி ரூபா 91,107,364 தொகை நிதிக்கூற்றுக்களில் காணிகள் மற்றும் கட்டிடங்கள் என காட்டப்பட்டிருந்த போதிலும் சபையினால் இந்த கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த காணிகளின் சட்டரீதியான உரிமை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2000 இன் 53 ஆம் இலக்க மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டத்திற்கு இணங்க மற்றும் 2008 ஜனவரி 25 ஆம் திகதிய இலக்கம் 1523/16 கொண்ட அதி விஷேட வர்த்தமானியின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய சபையின் அதிகாரப் பிரதேசத்தில் செயற்படும் 50

தச்சுவேலைத் தளங்கள், கொங்கிரீட் அச்சுக்கள் உற்பத்தி தொழில்கள் மற்றும் அரிசி ஆலைகளுக்காக அனுமதிப்பத்திரங்கள் பெற்றிருக்கவில்லை.

**3.2 வாகனப் பயன்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஜூன் 14 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 04/2015 இன் பிரகாரம் மோட்டார் வாகனங்களுக்கு காப்புறுதி பாதுகாப்பு பெறும் போது அரச நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும், இரண்டு வாகனங்களுக்காக தனியார் காப்புறுதி நிறுவனங்களில் இருந்து காப்புறுதி பாதுகாப்பு பெறப்பட்டுள்ளது.

(ஆ) உள்ளூராட்சி நிறுவனங்களின் பராமரிப்பு அலகுகளுக்காக தேவையான அடிப்படை இயந்திர உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் போக்குவரத்து வசதிக்காக வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் சபைக்கு வழங்கியிருந்த 8 வாகனங்கள் தொடர்பான உரிமையினை சபையின் பேரில் மாற்றிக்கொள்வதற்காக 2016 செப்தெம்பர் 29 ஆம் திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3. சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி இலக்கம் 185 இன் பிரகாரம் சபையின் காணப்படும் பணம் நாளாந்த தேவைக்கு தேவையான அளவை விட மிகையென கருதுமிடத்து, சபையின் இணக்கத்துடன் நிலையான வைப்பு ஒன்றாக வங்கி ஒன்றில் வைப்புச் செய்யப்பட வேண்டுமெனினும் பிரதேச சபையினால் மக்கள் வங்கியில் பேணப்படும் கணக்கில் 2015 ஆம் ஆண்டின் அனைத்து மாதங்களின் இறுதியிலும் ரூபா 12 இலட்சம் மற்றும் ரூபா 42 இலட்சத்திற்கு இடைப்பட்ட தொகையொன்று காணப்பட்டது.

(ஆ) சபையினால் 2015 ஜனவரி 27 ஆம் திகதி ரூபா 485,000 தொகையொன்று செலவிடப்பட்டு நீர் மாதிரிப் பரிசோதனை தொகுதியொன்று மற்றும் நீர் பில்டர் இரண்டு கொள்வனவு செய்திருந்த போதிலும் அந்த நீர் மாதிரிகளை பரிசோதனை செய்யும் தொழிநுட்ப அறிவுடைய அலுவலர் ஒருவர் இன்மையால் 2016 ஆகஸ்ட் 29 திகதி வரை அதனைப் பயன்படுத்த முடியாதிருந்தது.

(இ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சிலிருந்து 2006 ஆண்டின் போது சபைக்கு வழங்கியிருந்த கப் வண்டி 2015 ஆண்டு முதல் செயற்படாமல் வாகன தளத்தில் நிறுத்தப்பட்டு காணப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பாக பொருத்தமான செயற்பாடுகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3.2 பண்டக் கணிப்பீடு**

பண்டக் கணப்பீட்டு சபை அறிக்கையின் பிரகாரம் பண்டப் பதிவேட்டில் பதிவு செய்யப்படாத 72 பண்டங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதற்கு 2016 செப்தெம்பர் 29 திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டுத் திறமையின்மை**

கிழக்கு மாகாண நீர் வழங்கள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் பொது மக்கள் பங்குகொள்ளல் அடிப்படையில் குழாய்கள் பரப்புவதற்காக 2012 மற்றும் 2013 ஆண்டுகளின்

போது வழங்கப்பட்டிருந்த UPVC குழாய்கள் மற்றும் பொருத்துக்களில் மீதியாக காணப்பட்ட சுமார் 3000 குழாய்கள் தொக்கு ஒன்று பதவிய ஸ்ரீ புர, ஜயந்திவெவ மற்றும் சமன்புர ஆகிய களஞ்சியங்களில் முறையற்ற விதமாக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் அக் குழாய்களை முறையாக களஞ்சியப்படுத்துவதற்கும் வேறு விடயம் ஒன்றிற்கு பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.5 ஒப்பந்த நிருவாகம்**

**3.5.1 ஜயந்திவெவ வாராந்த சந்தை நிர்மாணித்தல்**

புரநெகும செயற்திட்டத்தின் கீழ் ஜயந்திவெவ வாராந்த சந்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 7,682,087 தொகை பெறுமதிக்கு 06 மாதங்களில் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்யும் அடிப்படையில் 2013 அக்தோபர் 09 ஆந் திகதி ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முதலாவது ஒப்பந்தக்காரரினால் வேலை ஆரம்பிக்கப்படாமையால் அந்த ஒப்பந்த வேலை இரண்டாவது ஒப்பந்தக்காரருக்கு ரூபா 8,428,900 தொகை பெறுமதிக்கு 2014 ஜனவரி 20 திகதி வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டம் ரூபா 746,813 தொகையினை முதலாவது ஒப்பந்தக்காரரிடம் அறவீடு செய்ய வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 384,105 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) இரண்டாவது ஒப்பந்தக்காரரினால் உடன்படிக்கையின் பிரகாரம் 2014 ஏப்ரல் 19 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனினும், வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2014 அக்தோபர் 20 திகதி சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை நிபந்தனை இலக்கம் 6.4 இன் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணமாக ரூபா 771,244 தொகையினை அறவீடு செய்வதற்காக 2016 செப்தெம்பர் 29 திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.6 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி**

2014 திசெம்பர் 31 திகதியில் சபையில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப் பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிடப் பதவியணி |
|---|---|---|---|
| நிறைவேற்று நிலை | 02 | - | 02 |
| இரண்டாம் நிலை | 17 | 10 | 07 |
| மூன்றாம் நிலை | 24 | 21 | 03 |
| மொத்தம் | 43 | 31 | 12 |

ஆயுள்வேத மருத்துவர், முகாமைத்துவ உதவியாளர், தொழினுட்ப உத்தியோகத்தர், நூலக காப்பாளர், மின்சார தொழிநுட்பவியலாளர் மற்றும் சாரதி பதவிகளில் 02 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையான காலப்பகுதியில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2016 செப்தெம்பர் 29 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட அவதானம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | கவனம் செலுத்த வேண்டிய பரப்பு |
|---|---|
| (அ) கணக்கீடு | வருமானத்தை கணக்கீடு செய்தல் |
| (ஆ) வருமான நிருவாகம் | நிலுவை வருமானத்தை அறவீடு செய்தல் |
| (இ) ஒப்பந்த நிருவாகம் | (i) தாமதக் கட்டண அறவீடு<br>(ii) ஒப்பந்த வரி செலுத்துதல் |